# 1

சில மாதங்களுக்கு முன், அந்துமணி அவர்கள், தாம் எழுதும் பா.கே.ப.வில் ஒரு போலீஸ் அதிகாரியின் அனுபவத்தைக் குறிப்பிட்டு, ‘வாசகர்களும் தங்கள் அனுபவத்தை எழுதலாமே...’ என்று முடித்திருந்தார்.

அதை வாசித்ததிலிருந்து என் கைகள் பரபரக்கத் தொடங்கி விட்டன. ஏனெனில், போலீஸ் ஸ்டேஷன்களுடன் என் அனுபவம் அத்தகையது. பொதுவாக, போலீஸ் என்றாலே, குற்றவாளிகள் தான் அஞ்சுவர். ஆனால், 30 ஆண்டுகளாக, போலீஸ் என்றாலே பொதுமக்கள் கூட பீதியடையும் நிலை உண்டாகியுள்ளது.

ஆனால், என் அனுபவமோ வித்தியாசமானது. படிப்பவர்களே ஆச்சரியப்படும் அளவுக்கு பிரமிப்பூட்டக் கூடியது. நான் சொல்வது பொய்யோ என்றும் கூட நினைக்கத் தோன்றும். ஆனால், அத்தனையும் அக்மார்க் நிஜம் என்பதுதான் உண்மை.

கட்டுரையைத் தொடங்குவதற்கு முன், மகாபாரதத்திலிருந்து ஒரு சிறு சம்பவம்...

நம்மில் அனைவருக்கும் மகாபாரதக் கதை நன்றாகவே தெரியும் தான்; நான் சொல்லப் போகும் சம்பவமும் தெரிந்திருக்கும். ஆனாலும், ஏன் அதைக் கூற முன்வருகிறேன் என்றால், அதில் சூட்சுமமான ஒரு விஷயம், ஒரு கருத்து, ஒரு செய்தி பொதிந்து கொண்டு ஒளிந்திருப்பதால் தான்!

தரும புத்திரன் என்றால், நல்லவன்; துரியோதனன் என்றால், கெட்டவன். இது தான் மகாபாரதக் கதையின் மையக் கருத்து.

ஒருமுறை இருவரையும் தனித்தனியாக அழைத்து, உலகமெங்கும் சுற்றி ஒரு கெட்டவனை அடையாளம் கண்டு கொண்டு வருமாறு தரும புத்திரரிடமும், ஒரு நல்லவனை அடையாளம் காட்டுமாறு துரியோதனனிடமும் கூறுகிறார் கிருஷ்ண பரமாத்மா.

இது ஒரு பெரிய விஷயமே அல்ல...

துரியோதனன் தருமரையும், தருமர் துரியோதனையும் சுலபமாக சுட்டிக் காட்டி விட்டால் போதும்; தீர்ந்தது பிரச்சினை. ஆனால், இருவரும் அப்படி சுட்டிக்காட்ட முன்வரவில்லை. உலகம் முழுவதும் சுற்றினர். சில நாள்கள் கழித்து இருவரும் தலையைத் தொங்க விட்டு, வாடிய முகத்துடன் திரும்பினர்; கிருஷ்ண பரமாத்மாவைச் சந்தித்தனர்; தனித்தனியாகத்தான்!

''உலகம் முழுவதும் சுற்றிப் பார்த்து விட்டேன் கண்ணா! ஒரு கெட்டவன் கூட என் பார்வையில் படவில்லை; எல்லாருமே நல்லவர்களாகத் தான் இருக்கின்றனர்...'' என்றார் தருமர்.

''ச்சே! என்ன உலகம் கிருஷ்ணா இது? நாயாய், பேயாய் அலைந்து திரிந்து பார்த்து விட்டேன். உலகில் ஒரு நல்லவன் கூட என் கண்ணில் தெரியவில்லை. அனைவருமே அயோக்கியர்கள் தான்!'' என்றான் துரியோதனன்.

பதில் ஏதும் சொல்லாமல் தனக்குள் மர்மமாக சிரித்துக் கொண்டார் கிருஷ்ண பரமாத்மா. சரி, இதில் என்ன விசேஷம்? என்ன செய்தி? என்ன கருத்து?

அவரவர் எண்ணம் எப்படி உள்ளதோ, அப்படித்தான் அவரவர் பார்வையும் இருக்கும் என்பது செய்தி.

துரியோதனன் கூட தருமரின் பார்வையில் கெட்டவனாகத் தெரியவில்லை என்பது கருத்து. தருமரை விடுங்கள்; அவர் துரியோதனனின் எதிரி. அதனால், அவர் அவன் பார்வையில் நல்லவனாகத் தெரியவில்லை!

ஆனால், 'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்' என்ற பழமொழிக்கேற்ப, 'பாஞ்சாலியை இழுத்து வா...' என்றதும் இழுத்து வந்த, சபையில், 'அவளைத் துகிலுரி' என்றதும், அண்ணி என்றும் பாராமல், சிரமேற் கொண்டு அண்ணனின் கட்டளைக்கு அடிபணிந்த துச்சாதனனும், ஆருயிர் நண்பன் கர்ணனும், துரியோதனனுக்கு எல்லாமாக இருந்து அவனை ஆட்டுவித்துக் கொண்டிருந்த மாமன் சகுனியும் கூட துரியோதனனின் பார்வையில் நல்லவர்களாகத் தெரிய வில்லையே... அது தான் விசேஷம்!

ஒரு ஆட்டோ டிரைவர் நம்மிடம் அடாவடியாக நடந்து கொண்டு விட்டால், ஒட்டு மொத்த ஆட்டோ டிரைவர்களும் மோசமானவர்கள்

என்றொரு அபிப்ராயம் நம் அனைவரின் மனத்திலும் ஏற்பட்டு விடுவது இயற்கை; இயல்பு.

எத்தனையோ ஆட்டோ டிரைவர்கள், தங்கள் ஆட்டோக்களில் பயணிகள் தவற விடும் பொருட்களை, அது எத்தனை லட்சம்



மதிப்புடையதாக இருந்தாலும், சிறிதும் சபலப்படாமல், உரியவர்களிடம் அல்லது அருகில் உள்ள காவல் நிலையத்தில் ஒப்படைத்துப் பாராட்டுப் பெறுகின்றனர். அவர்களைப் பற்றி பத்திரிகையிலும் படத்துடன் செய்தி வெளியாகிறது; ஆனால், அந்தச் செய்தி நம்மை பாதிப்பதில்லை.

ஏனெனில், நம்முடைய அனுபவத்தில் நாம் கண்டது ஒரு அடாவடியான ஆட்டோ டிரைவரைத் தான். காவல் துறையும் அது மாதிரித் தான். நமக்கு ஏற்படும் ஒரு சில கசப்பான அனுபவங்களை வைத்து, ஒட்டு மொத்த காவல் துறையும், போலீஸ் ஸ்டேஷன்களும் 'மோசம்' என்றொரு முடிவுக்கு வந்துவிடக் கூடாது.

அப்படியென்றால், காவல் துறையிலும், போலீஸ் ஸ்டேஷன்களிலும் பணிபுரியும் அனைவரும் 'மகான்கள்' என்று அர்த்தம் அல்ல; அங்கும் 'கறுப்பு ஆடுகள்' ஏராளம் உண்டு.

என்னுடைய அனுபவத்தில் எந்த போலீஸ் ஸ்டேஷனிலும் அது போன்றதொரு எந்தவொரு கறுப்பு ஆடும் என் பார்வையில் படவில்லை என்பதுதான் விசேஷம்!

**ஒ**ரு மனிதன் தன் வாழ்க்கையில் காலடி எடுத்து வைக்கக் கூடாத இடங்கள் மூன்று...

ஒன்று: ஹாஸ்பிட்டல்; இரண்டு: கோர்ட்; மூன்றாவது: போலீஸ் ஸ்டேஷன்.

இதில் உடல் ஆரோக்கியமாக இருந்தாலன்றி, ஹாஸ்பிட்ட லுக்குள் செல்வதைத் தடுக்க முடியாது.

அதே போல சொத்துகள் இருந்து, சொந்தங்களும் வில்லங்கமானவர்களாக இருந்து விட்டால், கோர்ட் படியேற வேண்டியதையும் தவிர்க்க முடியாது.

ஆனால், போலீஸ் ஸ்டேஷனுக்குள் போவதை, முயன்றால் தடுக்கலாம்; தவிர்க்கலாம்!

என்னால் போலீஸ் ஸ்டேஷனுக்குள் போவதை, போக வேண்டியிருந்ததை தடுக்கவும் முடியவில்லை; தவிர்க்கவும் இயலவில்லை.

எனக்குப் போலீஸ் ஸ்டேஷன் என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியது – சொன்னால் நம்ப மாட்டீர்கள் – ஆம்... போலீஸ் ஸ்டேஷனை எனக்கு என் வாழ்நாளில் முதன், முதலாக அறிமுகப்படுத்தியது என் தாய் தான்.

அப்போது எனக்கு வயது ஐந்து!

## 2

நம் பெற்றோர்களிடம் குறிப்பாகத் தாய்மார்களிடம் ஒரு அபூர்வமான குணம் உண்டு... குழந்தைகள் தவறு செய்தால், அதைத் தட்டிக் கேட்காமல் தட்டிக் கொடுப்பர்! அவர்களிடம் எவராவது வந்து புகார் சொன்னால், புகார் சொன்னவரையே புரட்டி எடுத்து விடுவர்...

'என் மகன் தவறே செய்ய மாட்டான்; அவன் தங்கக் கம்பி; நீதான் பொய் சொல்கிறாய்!' என்று சாதித்து, புகார் கொடுத்தவரை மிரளவைப்பர்.


புகார் கொடுக்க வந்தவரும், அந்தத் தாய்மார்களின் வாக்கு சாதுரியத்தால் மிரண்டு, 'நாம் தான் பொய் சொல்கிறோமோ ?' என்று தங்களைத் தாங்களே சந்தேகித்துக் கொள்ளத் தொடங்கி விடுவர்.

தாய்மார்களின் ரத்தத்தில் இப்படி, தங்கள் குழந்தைகளுக்காகப் பரிந்து பேசும் சுபாவமும் மகாபாரத காலத்திலேயே ஆரம்பித்து விட்டது.

கோகுலத்தில் கண்ணன் குழந்தைப் பருவத்தில், தன் வயதொத்த குழந்தைகளுடன் கூட்டணி அமைத்து, ஒவ்வொரு வீடாக

நுழைந்து உறியிலிருந்து வெண்ணெயைத் திருடி உண்டு களிக்க, பாதிக்கப்பட்ட யாதவர் குலப் பெண்டிர், யசோதையிடம் நியாயம் கேட்க வரும்போது, 'அடிப் போங்கடி... வந்துட்டாளுவ பெரிசா! எங்க வீட்டுல இல்லாத வெண்ணெயா? தயிரா? அதை உங்க வீட்டுல வந்து கண்ணன் திருடித் தின்னுட்டானா? இன்னொரு தபா இப்படி வந்து நின்னு புகார் சொன்னீங்கன்னா நடக்குறதே வேற... அக்காங்!' என்பாள்.

குற்றம் சொல்ல வந்தவர்கள் சத்தம் போடாமல் நடையைக் கட்டுவர்.



யசோதையின் முதுகுக்குப் பின்புறம், ஒளிந்து கொண்டு, கண்ணனும் இந்தக் காட்சியை ரசித்து, அப்பாவியாகச் சிரிப்பான்.

கண்ணன் கடவுள்; அவனால் இந்தத் திருவிளையாடலை நடத்த முடிந்தது.

பெரும்பாலான தாய்மார்கள், தங்களை யசோதையாகவும், தங்கள் குழந்தைகளை கண்ணனாகவும் தான் பாவித்து, தங்கள் குழந்தைகளின் தவறுகளை, உற்சாகப்படுத்தி ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றனர்.

நான் கண்ணனும் அல்ல; என் தாய் யசோதையும் அல்ல!

அப்போது எனக்கு வயது ஐந்து.

சிந்தாதிரிப்பேட்டை கல்யாணி மகளிர் உயர்நிலைப் பள்ளிக்குப் பக்கத்திலிருக்கும் மாண்டிஸோரி ஸ்கூலில் தான் என்னை ஒன்றாம் வகுப்பில் சேர்த்து விட்டிருந்தனர். பள்ளிக் கூடத்திற்குப் பக்கத்தில் தான் போலீஸ் ஸ்டேஷன்.

அக்ரஹாரத்தில் தான் வீடு இருந்தது. வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் ஒரு கி.மீ. தூரம் இருக்கும்.

அம்மா தான் பள்ளிக்கு இழுத்துக் கொண்டு வந்து விடுவாள். அதே மாதிரி பள்ளியிலிருந்து வீட்டுக்கும் இழுத்துக் கொண்டு போவாள்.

'இழுத்து'க் கொண்டு என்பதற்குக் காரணம் உண்டு... அம்மாவின் வேகத்திற்கு ஈடு கொடுத்து என்னால் நடக்க முடியாது.

அதனால், அம்மா, ஸ்கூல்பையைத் தூக்கிக் கொண்டு நடக்க, நான் அவளது சுண்டு விரலைப் பிடித்தபடி ஓடுவேன். வழியில் எங்கும் எதையும் வேடிக்கை கூட பார்க்க முடியாது; அவ்வளவு வேகம்.

பத்து மணிக்குப் பள்ளிக் கூடம்; ஒன்பது ஐம்பதுக்குத்தான் வீட்டிலிருந்து என்னை இழுத்துக் கொண்டு புறப்படுவாள் அம்மா.

மாதா கோவிலுக்கும், போலீஸ் ஸ்டேஷனுக்கும் நடுவில் இருக்கும் தெருவை அம்மா அடைவதற்கும், பள்ளிக்கூடத்தில் 'பெல்' அடிப்பதற்கும் சரியாக இருக்கும். 'பெல்' அடித்து முடிவதற்குள் ஸ்கூல் காம்பவுண்ட் கேட்டை இருவரும் அடைந்து விடுவோம்.

அதே போலத் தான் மதியமும். ஒரு மணிக்கு பெல்; ஒன்று பத்துக்கு வீடு; ஒன்று ஐம்பதுக்குப் புறப்பாடு. இரண்டு மணிக்கு ஸ்கூல். நாலு முப்பதுக்கு பெல்; நாலு நாற்பதுக்கு வீடு.

அம்மா 'வீட்டு விலக்காகும்' நாள்களில், அம்மாவின் டியூட்டியை, சீனு என்கிற சீனுவாசன் பார்ப்பான். எதிர்நீச்சல் படத்தில் வரும் மாடிப்படி மாது மாதிரி சீனுவாசன்.

அக்ரஹாரத்தில் யார் என்ன வேலை சொன்னாலும் செய்து முடிக்க வேண்டும்; அதோடு அவன் ஹைஸ்கூலிலும் படித்துக் கொண்டிருந்தான்.

அம்மாவாவது ஒன்பது ஐம்பதுக்குப் புறப்பட்டு விடுவாள். சீனுவால், ஒன்பது ஐம்பத்தைந்துக்குத் தான் கிளம்ப முடியும். அம்மா வுடன் வரும் போது, ஸ்கூல் பையை அம்மா சுமந்து வருவாள்.

சீனுவுக்கு அவனிடமும் ஒரு பை இருந்ததால், என் பையை நானே சுமந்தபடி அவனுக்கு இணையாக ஓடி வர வேண்டும்.

பள்ளிக்கூடம் இருக்கும் தெருவின் முனையில் ஒரு வண்டிக் கடையும், ஒரு பிளாட்பாரக் கடையும் இருந்தது. வண்டிக் கடையில், வேர்க்கடலை, பட்டாணி, மாங்காய்ப்பத்தை விற்கும்.

பிளாட்பாரக் கடையில், கமர்கட், ஜவ்வு மிட்டாய், களாக்காய், நெல்லிக்காய், கொடுக்காப்புளிக்காய், எலந்தம்பழம் போன்றவை 'கூறு' கட்டி வைக்கப்பட்டிருக்கும்.

இந்த இரண்டு கடைகளில் பிளாட்பாரக் கடை என்னை மிகவும் கவர்ந்தது. அங்கு 'கூறு' கட்டி வைக்கப்பட்டிருக்கும் கமர்கட்டையும், ஜவ்வு மிட்டாயையும் நான் அதுவரை பார்த்ததுமில்லை; சுவைத்ததுமில்லை.

அம்மாவிடம் அதைச் சுட்டிக் காட்டி ஒருநாள் கேட்ட போது, ''அதெல்லாம் நாம் சாப்பிடும் பொருட்களல்ல!'' என்று என்னைக் கண்டித்தாள்.

''ஏன் சாப்பிடக் கூடாது? மத்த பசங்க எல்லாம் வாங்கிச் சாப்பிடுதே?'' என்றேன்.

அது தெருவென்றும் பாராமல், விட்டாள் ஒரு அறை முதுகில்... ''சாப்பிடக் கூடாது என்கிறேன்; எதிர்த்தா கேள்வி கேட்கிறாய்?'' என்றாள்.

கமர்கட்டையும், ஜவ்வு மிட்டாயையும் வாங்கித் தின்றே தீருவது என்று அப்போதே, அங்கேயே முடிவெடுத்தேன்.

அந்த முடிவு, என்னை சிந்தாதிரிப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்குள் அழைத்துச் சென்று நிறுத்தும் என்று அப்போது எனக்குத் தெரியாது.

# 3

கமர்கட்டையும், ஜவ்வு மிட்டாயையும் சுவைத்துப் பார்க்க வேண்டுமானால், முதலில் அவற்றைக் கடையிலிருந்து வாங்க வேண்டும்; கடையிலிருந்து அவற்றை வாங்க வேண்டுமென்றால் அதற்குக் காசு வேண்டும்!

பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளுக்கு, வழியில் வாங்கித் திங்க காசு கொடுத்து அனுப்பும் வழக்கம் பல வீடுகளில் உண்டு; அந்தப் பழக்கம் என் வீட்டில் கிடையாது.

பாடப் புத்தகத்தில் தான் நாணயங்களின் படத்தைப் பார்த்திருக்கிறேனே தவிர, நிஜத்தில் நான் அதுவரை நாணயங்களைத் தொட்டுப் பார்த்தது கூட கிடையாது!

மேலும், கமர்கட்டும், ஜவ்வு மிட்டாயும் என்ன விலை என்றும் தெரியாது!

ஆனால், வீட்டில் எங்கெங்கு நாணயங்கள் புழங்கும் என்பது மட்டும் தெரியும்.

அப்பா, எழும்பூரில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகே ஹோட்டல் நடத்திக் கொண்டு இருந்தார்.

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் இடையே ஓர் உடன்பாடு உண்டு.

காலையில் ஹோட்டல் திறந்ததும், முதன் முதலாக 'போணி' ஆகும் பணம், அது ஓரணாவோ, ஒரு ரூபாயோ, அதை அப்படியே கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்து விட வேண்டுமென்பது தான் அந்த உடன்படிக்கை.

ஒரு ரூபாய்க்கு பதினாறு அணா. காலணாக்களும் புழக்கத்தில் இருந்த காலம் அது. காலணாவிலேயே இரண்டு வகை உண்டு: ஒன்று 'வாஷர்' மாதிரி இருக்கும்; 'தொண்டிக் காலணா' என்பது அதன் பெயர்; மற்றது நாய்க்காசு. அந்தக் காலணாவில் ஒருபுறம் நாயின் படம் பொறிக்கப்பட்டு இருக்கும்; அதனால் அந்தப் பெயர்.

பல சிறுவர்களின் அரைநாண் கயிற்றில் அந்த நாய்க்காசு ஓட்டை போட்டு நுழைக்கப்பட்டிருக்கும்; திருஷ்டி படாமல் இருப்ப தற்காக! எங்கள் வீட்டில், திருஷ்டி படாமலிருப்பதற்காக, அரைநாண் கயிற்றில் நாய்க்காசை ஓட்டை போட்டுக் கட்டும் பழக்கம் இல்லை.

அம்மா, இந்த தொண்டிக் காலணாக்களையே இரண்டு மூட்டை அளவுக்குச் சேர்த்து வைத்திருந்தாள்.

காலணாக்கள் தவிர, அரையணா, ஓரணா, இரண்டணா, கால் ரூபாய், அரை ரூபாய், ஒரு ரூபாய் நாணயங்களும் உண்டு.

ஓரணாவின் ஓரம் வளைவாக இருக்கும். இரண்டணா சதுர வடிவில் இருக்கும். மஞ்சள் நிறத்தில் இருக்கும். கால் ரூபாய், அரை

ரூபாய், ஒரு ரூபாய் நாணயங்கள் இப்போது உள்ளது போலவே வட்ட வடிவமானவை.

அப்பாவின் கஜானா பீரோ; அதில் ரூபாய் நோட்டுகள் மட்டும் தான் இருக்கும். அடுக்களையிலிருக்கும் அஞ்சறைப் பெட்டி தான் அம்மாவின் பாதுகாப்புப் பெட்டகம்.

அம்மாவின் அஞ்சறைப் பெட்டி ஆறு அறைகள் கொண்டது. கடுகு, உளுத்தம்பருப்பு, வெந்தயம், வரமிளகாய், மிளகு, சீரகம் ஆகியவை அதில் அடக்கம்.

இதில் வரமிளகாய் உள்ள அறையைத் தவிர ஏனைய ஒவ்வொரு அறையிலும், ஒரணா, இரண்டணா, கால் ரூபாய், அரை ரூபாய், ஒரு ரூபாய் நாணயம் என்று ஒவ்வொரு நாணயம் இடம்பெற்றிருக்கும்.

'விலக்காக' இருக்கும் நாள்களில் அம்மா வீட்டுக்குள் நுழைய மாட்டாள்; புழக்கடையில் தான் இருப்பாள். எங்கள் இருவருக்குமான ஆகாரத்தை, ஆள் மூலம் ஹோட்டலிலிருந்து அனுப்பி விடுவார் அப்பா.


அந்த அரிய சந்தர்ப்பத்திற்காகவே காத்திருந்த மாதிரி, அன்று அடுக்களைக்குள் நுழைந்து, அவசர அவசரமாக அஞ்சறைப் பெட்டியைத் திறந்து, கிடைத்த அறைக்குள் விரலை விட்டு அள்ளி எடுத்ததில் கையில் நாலைந்து கால் ரூபாய்கள் கிடைத்தன. அதில் ஒரேயொரு நாணயத்தை மாத்திரம் டவுசர் பாக்கெட்டில் பதுக்கி வைத்து மற்றவற்றை அதிலேயே போட்டு விட்டேன்.

என்னுடைய கமர்கட் ஆசைக்கு வெறும் காலணாவே போதுமென்பதும், நாலணா அதிகம் என்பதும், அந்த நாலணாதான்

[redacted]

[redacted]

[redacted]



[redacted]